**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.185 /2024 நாள்-17.06.2026

**பி.வா.சா.1. கணேசபாண்டியன்**

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில்**

நான் பி.காம் படித்துள்ளேன். வாதியை எனக்கு குருமூர்த்தி என்பவர் மூலம் தெரியும். குருமூர்த்தி என்னுடன் வேலை பார்த்தவர். நான் கலசலிங்கம் கல்லூரியில் லேப் டெக்னீசியனாக பணிபுரிந்து வந்தேன். வா.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 10.03.2022 ல் ரூ.4 லட்சம் கடனாக பெற்றுக் கொண்டு வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொந்த ஊர் வளையம்பட்டி. வாதியின் சொந்த ஊர் இராசபாளையம். வாதியை எனக்கு குருமூர்த்தி என்பவர் மூலம் தான் பழக்கம் நேரடியாக தெரியாது. நான் கூறும் ரூ.2 லட்சம் கடனை குருமூர்த்தி மூலமாக வாதியிடம் பெற்றேன். வாதியிடம் பெற்ற கடனுக்கு வாதியிடம் வட்டி செலுத்தியுள்ளேனா என்று கேட்டால் வாதியின் வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளேன். நான் வாதியிடம் 2019 ம் ஆண்டு கடன் வாங்கியதாக என் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் பிரதிவாதியின் அலைபேசி எண்ணும், பிரதிவாதியின் பெயரும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான் அவர் அனுப்ப சொன்ன வங்கி கணக்கிற்கும், அலைபேசி எண்ணிற்கும் பணம் அனுப்பி வைத்தேன். பி.வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டது போன்று பிரதிவாதி வங்கி கணக்கிற்கு எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றும் பிரதிவாதிக்கு எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. குருமூர்த்தியை விசாரித்தால் வழக்கின் உண்மைத்தன்மை தெரிய வரும் என்றால் சரிதான். கணேசன் மகன் லிங்கராஜ் என்பவர் வாதியின் நண்பர் எனக்கு அவரை நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.2- எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மூல ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2-ஐ வாதியிடம் ரூ.4 லட்சம் கடன் பெறும் போது கிரையமாக வாதியிடம் கொடுத்தேன் என்று சொன்னால் ரூ.2 லட்சம் மட்டும் தான் கடன் பெற்றேன். லிங்கராஜ் குருமூர்த்தி முன்பாக வாதியிடம் அசல் தொகையை நேரடியாக கொடுத்தற்கான ரசீது பெறவில்லை என்று சொன்னால் சரிதான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு 6 மாதங்களுக்கு முன்பாக பணத்தை நேரடியாக கொடுத்தேன். நான் வாதியிடம்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டசருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

உண்மையாகவே பணம் கொடுத்திருந்தால் எந்த தேதியில் எங்கு வைத்து பணம் கொடுத்திருப்பேன் என்று குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றும் நான் கொடுக்காததால் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்திருந்தால் வாதியிடம் கொடுத்திருந்த வா.சா.ஆ.1, 2- ஐ உடனடியாக திரும்ப பெற்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பணம் கொடுத்த பின்பு ஆவணங்களை திருப்பி தரக்கோரி வாதிக்கு நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான் அதற்குள் வழக்கு தாக்கல் செய்துவிட்டார். நான் வாதியிடம் வாங்கிய அசல் மற்றும் வட்டி தொகையை நாளது தேதி வரை திருப்பி செலுத்தவில்லை என்றும் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் 2019 ம் ஆண்டு கடன் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல நான் நிரப்பப்படாத வெற்று கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1- வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.